**குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையினம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக் கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டம், ஒழுங்கு, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ முடிவுகள் ஆகியவற்றுடன் இணங்காமை

| | சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனம் | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 02.ᐧ.2017 கொண்ட சொத்துக்களுக்கான முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(i) பந்தி | 2018 ஆம் ஆண்டு நீதி அமைச்சினால் அதிகார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 08 வாகனங்களுக்கான பதிவு உரிமையினை மீதான பிரச்சினையை தீர்த்து வைக்கப் பட்டிருக்கவில்லை. | நிதி அமைச்சினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட வாகனங்களை கையேற்றுக் கொள்வதற்கு தேவையான ஆவணங்கள் பூர்த்தி செய்து 2020.09.28 திகதியன்று நீதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டன. | சுற்றறிக்கைப் பிரகாரம் செயற்பட்டு வாகனங்களின் உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 02/2018 கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்காததுடன், பணிக் குழாமில் ஒவ்வொரு உறுப்பினருக்குமாக பயிற்சி வாய்ப்பினை உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் செயற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறுகள்

மீளாய்வாண்டில் நடவடிக்கை விளைவில் ரூபா 2,719,343 க்கான பற்றாக்குறை ஏற்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக சென்ற ஆண்டின் மிகை ரூபா 543,765 ஆக இருந்தது. அதன்படி நிதிவிளைவில் ரூபா 3,263,108 க்கான பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவுக்கு அரச மீண்டெழும் கொடைகள் குறைந்தமை முக்கிய காரணியாக உள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய இலக்கம் 05/2008(1) | தேசிய அதிகார சபையின் செயற்பாடுகள் | சுற்றறிக்கைப் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | கொண்ட சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட, 2008 பெப்ரவரி 06 திகதிய இலக்கம் 05/2008 கொண்ட பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பிரஜைகள் / வேலை கொள்வோர் சாசனத்தின் பிரகாரம் 2021 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையிலும் செயற்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுத்து செல்வதுடன் தற்போதைக்கு கையேடுகள் வழிகாட்டல்கள் மற்றும் அறிவுரை வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு வருவதனால் அக்காரியங்கள் முடிந்ததன் பிறகு அவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பற்றி கவனம் செலுத்தப்பட்டு பிரஜைகள் / வேலை கொள்வோர் சாசனத்தினை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பிரஜாசனம் ஒன்றினை தயாரிப்பதற்கு செயற்பட வேண்டும். |
| (ஆ) | தற்போது அதிகாரசபையில் தொழிற்படும் 1985 கொண்ட உடன் தொலைபேசி சேவைக்கான Call Centre தாபிப்பதற்கு தேவையான மென் மற்றும் வன் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான நிதி அனுசரணையினை UNDP நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருந்ததுடன் 2019 நவம்பர் முதல் 2020 நவம்பர் வரையிலும் முகாமைத்துவ சபையொன்று நியமிக்கப்பட்டில்லாது இருந்தமையினால் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு இயலாது போனமையினால் அந் நிதிக் கொடையினை அதிகார சபை இழக்க நேரிட்டது. | 2019 நவம்பர் மாதம் Call Centre வசதியினை தாபிப்பதற்கு நிதி அனுசரணையினை UNDP நிறுவனத்திடமிருந்து நேரடியாக சம்பந்தப்பட்ட நிர்மாணிக்கும் தாபனத்திற்கு பெற்றுக் கொள்ள முடிந்திருந்த போதிலும் அதற்கான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவ சபையினை நியமிக்கப்பட்டில்லாதிருந் ததனால் (2019 நவம்பர் மாதம் முதல் 2020 நவம்பர் மாதம் வரையிலும்) அக்கொடையினை நாம் இழக்க நேர்ந்தது. | அந்த அந்த சந்தர்ப்பங்களில் கிடைக்கும் நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் சட்ட மூலத்தின் 13(1)(ஊ) பிரிவின் பிரகாரம் குற்றச் செயல்களுக்கு பலியாக்கப் பட்டோருக்கு சட்ட மூலத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியிலிருந்து நஷ்டஈடு வழங்குவதற்காக முன்மொழிமுறைமை ஒன்றினை வகுத்து அதனை ஏற்கப்படுத்தும் மற்றும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பாதுகாப்பு நிதியத்திலிருந்து நஷ்டஈடு வழங்குவதற்கும் தேவையான உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்குமாக நிதியினை வழங்கும் முறைமையொன்றினை தயாரிப்பதற்கு 2019 ஆகஸ்ட் 06 ஆந் திகதி முகாமைத்துவ சபையினால் குழுவொன்று நியமிக்கப்பட்ட போதிலும் 2019.11.28 திகதி முகாமைத்துவ சபையினை கலைக்கப்பட்டமையினால் அக்காரியத்தினை முடிப்பதற்கு இயலாது போனது. 2020.12.15 ஆந் திகதியன்று அதிகார சபையின் புது முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் இதற்காக புதுக் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் நிதியத்திலிருந்து நஷ்டஈடு வழங்கல் மற்றும் நிதி வழங்குவதற்கான முறைமையை தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | சட்டமூலத்தின் (ஊ) பிரிவின் படி துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சட்டமூலத்தின் 13(1)(உ) பிரிவின் பிரகாரம் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கு மற்றும் சாட்சிகளுக்கு ஆதரவு வழங்குவதற்கான முன்மொழி திட்டமொன்றினை மேம்படுத்தல், ஈடுபடுத்தல் மற்றும் செயற்படுத்தல் ஆகியன மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சமகால செவிப்புல, கட்புல தொடர்பு மூலமாக சாட்சியங்களின் சாட்சியங்களை தூர இடங்களிலிருந்து பெற்றுக் கொள்ளல் பலியாக்கப் பட்டோர்களுக்காக பலியாக்கப்பட்ட தாக்கத்திற்கான கூற்றுக்களை தயாரிக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு | சட்ட மூலம் பிரகாரம் முன்மொழித் திட்டமொன்றினை துரிதமாக செயல்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பித்தல் அரச மற்றும் சிவில் இயக்கங்களின் ஆதரவுடன் பலியாக்கப்பட்டோருக்கு பலவிதத்திலான உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் ‘‘குற்றச் செயல்களுக்கு பலியாக்கப்பட்டோரின் மற்றும் சாட்சியங்களின் ஆதரவாளர் மற்றும் பாதுகாப்பு நிதியத்திலிருந்து’’ நஷ்டஈடு வழங்கல் மற்றும் நிதி வழங்கும் முறைமையொன்றினை தயாரித்தல் ஆகிய துணைச் சேவைகள் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. | |
| (இ) | 2016 வருடம் முதல் 2020 வருடம் வரை அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ள 556 முறையீடுகளில் 266 முடிக்கப்பட்டு இருந்ததுடன் முடிக்கப்படாத முறையீடுகளின் எண்ணிக்கை 290 ஆக இருந்தமையினால் அவை கிடைக்கப் பெற்ற மொத்த முறையீட்டு எண்ணிக்கையின் நூற்றுக்கு 52 ஆகும். | 2020 வருடம் இறுதி காலகட்டத்தில் அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற முழு முறையீடுகளில் 266, 2020.12.31 வருடம் முழுமையாக முடிக்கப் பெற்று இருந்தன. | அதிகார சபையின் செயலாற்று கையினை மேம்படுத்திக் கொள்வதற்கு செயற்படல் வேண்டும். |
| (ஈ) | சட்டமூலத்தின் 29(4) பிரிவின் பிரகாரம் குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கான மற்றும் பலியாக்கப்பட்டவரினால் பராமரிக்கப்படுவோருக்கு கொடுக்கப்படும் நஷ்டஈடு நிதியத்தின் முக்கிய செலவினம் ஆவதுடன் சட்ட மூலத்தின் 2(இ) பிரிவின் பிரகாரம் பலியாக்கப்பட்டோருக்கு | நிதியத்திலிருந்து நஷ்டஈடு மற்றும் நிதியினை வழங்குவதற்காக முறைமையொன்றினை வகுத்து அங்கீகரிக்கப்படும் வரை முகாமைத்துவ சபையின் ஆலோசனைப் படி சில தகவுதிறன்களை அடிப்படையாகக் கொண்டு பலியாக்கப்பட்டவர்கள் நான்கு பேருக்கு 2020 வருடத்தினுள் ரூபா 17,943 | சட்டமூலத்தின் பிரகாரம் நஷ்டஈடு வழங்குவதற்கான முன்மொழிதல் முறையினை துரிதமாக தயாரிக்கப்பட்டு நஷ்டஈடு வழங்குவதை செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எதிராக செய்யப்பட்ட குற்றத்திற்காக குற்றவாளியிடமிருந்து பலியாக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு பெற்றுக் கொள்வதற்கு இடமளிப்பது சபையின் நோக்கமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட ரூபா 6.681.270 தண்டப்பண வருமானம் சட்ட மூலத்தின் 29(4) பிரிவின் பிரகாரம் ரூபா 17.943 மட்டுமே 4 தனிப்பட்டோருக்கு செலுத்தப்பட்டிருந்தது.அதன் பிரகாரம் பலியாக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான செயன்முறைகள் முறையாகச் செயற்படுத்தப்பட்டனவா என்பது கேள்விகுறியாக இருந்தது. | க்கான நிதியினை செலுத்தப்பட்டிருந்தது. | |

### 3.3 பிற இயக்கங்களின் வளங்களை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டதிதின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2019 வருடம் முடிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த துணை மற்றும் பாதுகாப்புப் பிரிவினை தாபித்தல் மற்றும் முன்னெடுத்துச் செல்லல் தொடர்பான வழிகாட்டனினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பாதுகாப்பினை வழங்கலுக்கான வேலைத்திட்டங்களுக்காக தரத்திற்குட்பட்ட புரோட்டோகோல் ஒன்றினை தயாரிப்பதற்கு துணை வழங்குதல் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2019 வருடம் துணை மற்றும் பாதுகாப்பு பிரிவினை தாபித்தல் மற்றும் முன்னெடுத்துச் செல்லல் தொடர்பான வழிகாட்டலினை தயாரிப்பது போன்றே ஏனைய செயற்பாடுகளுக்காக UNDP கொடையினை, முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகளுக்கு உபயோகிக்கப்பட்டதனால் போதுமானதாக இருக்கவில்லை. | முன்னுரிமையினைக்கு ஏற்றவாறு செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 56 மற்றும் உண்மையான ஊழியர் எண்ணிக்கை 36 ஆக இருந்ததுடன் நிறுவன பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு நேரடி தாக்கத்தினை ஏற்படுத்தும் 15 வெற்றிட பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அதிகாரசபைக்கு முடியாது போய் இருந்தது. | பணிப்பாளர், சட்ட அதிகாரி, விசாரணை அதிகாரி, தொடர்பாடல் அதிகாரி மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு முன்வரும் சில மாதங்களுக்குள் ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பாதுகாப்பு உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்தல் மேற்படி வெற்றிட பதவிகளின் கீழ் வருவதனால் அவ் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொண்டதன் பின்னர் அவர்களை | அத்தியாவசிய பணிக்குழாம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு செயற்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 வருடம் செயற்பாட்டுத் திட்டத்தின் படி தானியங்கி சம்பவ முகாமைத்துவ முறைமையினை அதிகார சபையினுள் நிர்மாணித்தல் மற்றும் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2021 ஏப்ரல் 27 ஆந் திகதி வரையிலும் அதனை செயல்படுத்தப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே அதிகார சபையின் நோக்கினை அடைந்து கொள்வதற்கு அத்தியாவசியமான துணை மற்றும் பாதுகாப்பு பிரிவுக்கு தேவையான பணிக் குழாமினைக்கு | 2019 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்தின் தானியங்கு சம்பவ முகாமைத்துவ முறைமையினை அதிகார சபையினுள் தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவ்வருடம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் (UNDP) கீழ் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய அறிவுறுத்தல் | செயற்பாடுகளின் முன்னுரிமை மற்றும் நிதி திரட்டல் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரிக்கப்படல் வேண்டும். துணை மற்றும் பாதுகாப்பு பிரிவின் பணிக் |

| | | |
|---|---|---|
| ஆட்சேர்ப்பு செயற்பாடு 2019 மற்றும் 2020 வருடங்களில் செயற்பாட்டு திட்டங்களில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவ் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேலைத்திட்டங்களுக்கு ஈடுபடுத்துவதற்கு நேரிட்டமையினால் அதனை செய்வதற்கு முடியாது போயிற்று. அதிகார சபையின் பாதுகாப்பு பிரிவு தற்போது உதவி பணிப்பாளர் (சட்டம்) கீழ் தாபிக்கப்பட்டு அது தொடர்பான பொறுப்புக்களை நிறைவேற்றப்படுகின்றன. அப்பிரிவின் பணிப்பாளர் (பாதுகாப்பு) மற்றும் பணிக் குழாமினை ஆட்சேர்ப்பு செய்வதற்கான சகல நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு இருப்பதுடன் கொவிட் தொற்று காரணமாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை முடிப்பதற்கு தாமதமாய் உள்ளது. | குழாமினை துரிதமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு அதிகார சபையினை அடைவதற்கு செயற்படல் வேண்டும். |